[17th July 1962

MR. SPEAKER: Does the hon. Member Sri B. Natarajan who has put this question, wish to put any supplementary question?

SRI B. NATARAJAN: No, Sir.

The Madras Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961 (implementation)

* 344 *Q.*—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Public Works be pleased to state the steps taken so far towards the implementation of the Madras Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961, and when it is proposed to announce the "notified date"?

THE HON. SRI V. RAMAIAH: The Madras Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961, (Madras Act 58 of 1961) was first published as an Act on 2nd May 1962. Its implementation for all practical purposes may be said to start from the date to be notified by the Government under section 8 (1) of the Act. But before the 'notified date', the rules prescribing the forms of the returns, etc., and the procedure to be followed by the authorized officers and other bodies, under the Act, will have to be made. The administrative machinery necessary for the working of the Act will also have to be set up. The draft rules are under preparation. Proposals regarding the appointment of officers and the constitution of bodies, to discharge functions under the Act, are under consideration. It cannot be stated definitely now as to what date will be the 'notified date'.

திரு. மீ. கலியாணசுந்தரம்: எந்தத் தேதியை நிர்ணயிக்கப் போகிறீர்கள் என்பதைக் கூறமுடியாவிட்டாலும், மிகுந்த காலதாமதம் ஆவதை உத்தேசித்து, துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா: கனம் அங்கத்தினர் இந்தச் சட்டத்தைக் கொஞ்சம் நுணுக்கமாகப் பார்த்துக்கொண்டிருக்கிறீர். நமது அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், இந்த சட்டத்தை நடைமுறையில் கொண்டு வருவதற்கு எவ்வளவு துரிதமாக முடியுமோ, அதற்கான முயற்சிகளை எடுத்துக்கொண்டு வருகிறீர்கள். அதில் போதுமான கவனம் செலுத்தப் பட்டு வருகிறது. அதிக காலதாமதம் ஏற்படாமல் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவருவதற்கு எல்லாவிதமான முயற்சிகளையும் அரசாங்கம் எடுத்துக் கொள்ளும்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: சட்டம் நிறைவேற்றப்பட்டு விதிகள் பிறப்பிப்பதற்கு ஒரு வருஷ காலம் ஆவது அரசாங்கம் துரிதமாக நடவடிக்கை எடுப்பதற்கு அடையாளமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா: இந்த விதிகளை நிர்ணயம் செய்வதற்கு முன்பு இந்தச் சட்டம் எல்லா கட்டத்திலேயும் அங்கீகரிக்கப்படவேண்டும். சட்ட சபையிலே அங்கீகாரம் கிடைத்தது. அதற்குப் பிறகு ஜனாதிபதி அங்கீகாரம் கிடைக்கவேண்டும். அது கிடைக்குமா, கிடைக்காதா என்று பலருக்கு சந்தேகம் இருந்தது. இப்பொழுதுகூட பத்திரிகைகளில் பார்த்தால், சில மாநிலங்களிலே ஜனாதிபதியின் அங்கீகாரம் கிடைக்காத மசோதாக்கள் இருக்கின்றன என்பது தெரியவரும். இந்த நிலைமையிலே, ஜனாதிபதியின் அங்கீகாரம் கிடைத்தவுடன், அதற்கு வேண்டிய கவனத்தை அரசாங்கம் செலுத்தக்கூடிய காரணத்தால், துரிதமாக இந்தச் சட்டம் நடைமுறையில் வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.